**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 109 | of | 2019 |

**2025-ம் ஆண்டு ஜுன் திங்கள் 18-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.ஆ.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **குருஷாஷ்த்ரா** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்- 18.06.2025.**

**வா.சா.-1 ஆஜர்-**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் ஏற்கனவே சொன்னவாறு என் குடும்ப உறுப்பினர்களின் மாத சம்பளமாக பெற்ற தொகை எவ்வளவு என்றும், தனிப்பட்ட முறையில் என்னிடம் இருந்த தொகை எவ்வளவு என்றும் குறிப்பிட்டு சொல்ல இயலாது. 1ம் பிரதிவாதி ANM பள்ளியில் தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர் என்றால் சரிதான். அவர்களுக்கு ஒரே மகன் என்றால் சரிதான். பிரதிவாதிகள்

அரசு ஊழியர்கள் என்பதால் போதுமான வருவாய் உள்ளதுஎன்றும் கடன் வாங்க அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ-1 ல் குடும்ப செலவுக்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளது, முற்றிலும் தவறு என்றால் அதை மறுக்கிறேன். வா.சா.ஆ.1ல் வேறு சில நபரிடம் வாங்கிய கடனை திரும்ப அடைப்பதற்காக என்று சொல்லப்பட்டுள்ளது, பொய்யான விவரம் என்றால் அதை மறுக்கிறேன். பிரதிவாதிகள் வேறு யார் யாரிடம் கடன் வாங்கினார்கள் என்பதை கேட்டுத் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.1 ஆவணத்தின் தன்மை குறித்து வழக்குரையில் சரியாக சொல்லப்பட்வில்லை என்றால் அதை மறுக்கிறேன். வா.சா.ஆ.1 க்கான முத்திரை தாள் 1ம் பிரதிவாதியால் வாங்கப்படவில்லை என்றால் அதை மறுக்கிறேன். வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்துக்கள் 1,2 பிரதிவாதிகளின் கையெழுத்துக்கள் இல்லை என்றால் அதை ஆட்சேபிக்கிறேன். வா.சா.ஆ-1 2-வது பக்கத்தில் stamp க்கு மேலே, கீழே மற்றும் stamp ல் என 3 இடங்களில் இருவரும் கையெழுத்திட்டதாக உள்ளது என்றால் சரிதான். பொதுவாக 3 இடங்களில் கையெழுத்திட அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்பதை இவை காட்டுகின்றன என்றால் அதை மறுக்கிறேன். 1வது சாட்சி வரதன், 2 வது சாட்சி மோகன் பாபு என்னுடன் ஒரே ஒன்றியத்தில் வேலை பார்ப்பவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும் என்னுடன் ஒரே ஒன்றியத்தில் வேலை பார்ப்பவர் ஆவார். 2வது சாட்சி மோகன் பாபு எனக்கு 10 ஆண்டுகள் பழக்கம். 1வது சாட்சி வரதன் எனக்கு 12 ஆண்டுகள் பழக்கம். 1,2 சாட்சிகள் என்னுடன் ஒரே ஒன்றியத்தில் வேலை பார்ப்பதால் அவர்களுடன் கூட்டு சேர்ந்து வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.30 லட்சம் கடன் கொடுக்க எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

Principal District Judge

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Chengalpattu